எழிலுறு காட்சிகளுடன்
அழகுறப் படம் பிடித்திட
விஜயம் செய்யுங்கள்

அஜந்தா போட்டோ

63, சங்கிலியன் வீதி,
(முத்திரைச் சந்தையடி)
நல்லூர்.

பொது நூலகம்
மாநகராட்சி மன்றம்
16-8-1994
யாழ்ப்பாணம்

பக்கங்கள், ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மங்களகரமான நிகழ்ச்சிகளை
நிறைவெனத் துலங்கிட
வீடியோ படம்பிடித்திட

அஜந்தா வீடியோ

63, சங்கிலியன் வீதி,
(முத்திரைச் சந்தையடி)
நல்லூர்.

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆடி 30 திங்கட்கிழமை (15-08 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 260

### 20 வாகனங்களில் ஈ.பி.டி.பியினர் நடமாட்டம்

கொழும்பு, ஓக. 15

தலைநகர் கொழும்பில் ஈ.பி.டி.பி. குழுவினர் நேற்று முன்தினம் இரவு 20 வாகனங்களில் திரிந்து பலரையும் விசாரணை செய்து மிரட்டல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும்—

இந்தத் தேர்தலில் ஐ.தே.க. வின் வன்முறைப் பிரிவாக ஈ.பி.டி.பி. இயங்கப் போவதாகவும்—

எதிரணி வேட்பாளரான சி.வி. குணரத்ன தெரிவித்துள்ளார். (உ-3)

நாளை பொதுத் தேர்தல்

# ஆளும் கட்சியின் தேர்தல் குளறுபடிகளை முறியடிப்பதற்கு சகல திட்டங்களும் தயார்!

## சந்திரிகா நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஓகஸ்ட் 15

ஸ்ரீலங்காவின் பத்தாவது நாடாளுமன்றத்தைத் தெரிவு செய்வதற்கான பொதுத் தேர்தல் நாளை நடைபெறவிருக்கிறது.

நாளை வாக்களிப்பு தினத்தன்று ஊழல் மற்றும் தேர்தல் குளறுபடி நடவடிக்கைகளில் இறங்குவதற்கு ஆளும் கட்சி முயற்சிக்குமானால் —

அதனை முறியடிப்பதற்கான சகல திட்டங்களையும் ஏற்பாடுகளையும் தயார் நிலையில் தாம் வைத்திருப்பதாக சந்திரிகா குமாரணதுங்க அறிவித்திருக்கிறார்.

தாம் தயார் நிலையில் வைத்திருக்கும் மாற்று நடவடிக்கைகள் ஜனநாயக முறையில் அமைந்தவை என்றும்—

தமக்கு எதிரிலிருந்து வன்முறை வராது என்றும் அவர் மேலும் கூறினார்.

பொதுத் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் நேற்று செய்தியாளர் மாநாடு

(6 ஆம் பக்கம் பார்க்க)

### புது அமைச்சரவை அடுத்தவாரம் கூடும்

கொழும்பு, ஓக. 15

பொதுத் தேர்தலில் வெற்றி பெறும் புதியவர்களைக் கொண்ட புதிய அமைச்சரவை அடுத்த வாரம் கூடும் என்றும் —

தற்போதைய அமைச்சரவையின் கூட்டம் இந்த வாரத்தில் இடம்பெறாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### எதிரணி வேட்பாளர் கைது

கொழும்பு, ஓக. 15

ராஜாங்க அமைச்சர் ரவீந்திர சமரவீராவின் முறைப்பாட்டின் மீது பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பதுளை மாவட்ட வேட்பாளரான என். ஏ. ஆர். மத்துமபண்டாரவை பொலிஸார் நேற்றுப் பிற்பகல் கைது செய்தனர்.

இதனை ஆட்சேபித்த — ஐயாயிரத்துக்கும் அதிகமான முன்னணியின் ஆதரவாளர்களை பொலிஸார் தடுத்து திருப்பியனுப்பினர் என்றும் கூறப்படுகிறது. (உ-எ-6)

### மதுபான விற்பனை: தேர்தலை ஒட்டி தடை விதிப்பு

கொழும்பு, ஓக. 15

பொதுத் தேர்தலையொட்டி இன்று முதல் 3 தினங்களுக்கு மதுபான விற்பனையை ஸ்ரீலங்கா அரசு தடை செய்துள்ளது.

தேவை ஏற்படின் மேலும் இரு தினங்களுக்கு இத்தடை நீடிக்கும் என்றும் அரசு அறிவித்துள்ளது. (உ-3)

### துறைமுகத்தில் வேலைநிறுத்தம்

கொழும்பு, ஓக. 15

கொழும்புத் துறைமுகத் தொழிலாளர்களும் ரகமாஸ்டர்களும் பதவி உயர்வு கோரி கடந்த வியாழக்கிழமை முதல் வேலை நிறுத்தத்தில் இறங்கியுள்ளனர்.

இதனால் கப்பல்களில் பொருள்கள் ஏற்றி இறக்கும் வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளன. (உ-3)

### காயமுற்றவர் மரணம்

அச்சுவேலி, ஓக. 15

அச்சுவேலி தோப்பு கொலனியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஷெல் தாக்குதலில் படுகாயமுற்ற — ஓய்வுபெற்ற ஆசிரியர் — திருமதி லோகேஸ்வரன் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் காலமானார்.

ஒரே குடும்பத்தில் ஐவரைப் பலிகொண்ட ஷெல் தாக்குதலில் இவர் படுகாயமுற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-11 13)

### முச்சந்தி முரளி



ஆளும் கட்சி தோல்வியுற்றால்

## ஐ. தே. கவினரின் ஏற்பாட்டில் இராணுவ சதிப்புரட்சி வரலாம்

கொழும்பு, ஓக. 15

பொதுத் தேர்தலில் ஏற்படக்கூடிய தோல்வியைச் சமாளிப்பதற்காக இராணுவ சதிப்புரட்சி ஒன்றை நடத்த ஐ.தே.க. திட்டமிட்டிருப்பதாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி இவ்வாறு எச்சரித்திருக்கிறது.

முன்னணியின் சார்பில் கொழும்பு மாவட்ட வேட்பாளர் சி.வி. குணரத்ன இத்தகவலை வெளியிட்டதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

எதிர்க்கட்சித் தலைவியின் வாசஸ்தலத்தில் எதிரணியினர் கடந்த புதன்கிழமை நடத்திய செய்தியாளர் மாநாட்டில் வைத்தே அவர் இத்தகவலைத் தெரிவித்தாராம்.

அவர் மேலும் தெரிவிக்கையில் —

"தற்போதைய இராணுவத் தளபதியை மாற்றம் செய்து விட்டு, 'சர்ச்சைக்குரிய' ஜெனரல் ஒருவர் இராணுவத் தளபதி பதவிக்கு நியமிக்கப்படவுள்ளார் என்றும் கூறினார். (உ-3)

தோட்டத் தொழிலாளருக்கு கொலைப் பயமுறுத்தல்!

## ராணுவம், கொமாண்டோக்கள் மலையகப் பகுதிக்கு விரைவு!

கொழும்பு, ஓக. 15

ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் தோட்டத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் பொறுப்பை இராணுவம் மற்றும் பொலிஸ் கொமாண்டோக்களை உள்ளடக்கிய பாதுகாப்புப் பிரிவு ஏற்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் பண்டாரவளை, ஹப்பிட்டிகந்த தோட்டத்தில் புகுந்த ஆயுதக் குழு ஒன்று தொழிலாளர்களின் தேசிய அடையாள அட்டைகளையும் வாக்காளர் அட்டைகளையும் அபகரித்துக் கொண்டு, தேர்தலில் வாக்களித்தால் கொல்லப்படுவார்கள் என்று எச்சரித்து விட்டுச் சென்றதாக தெரிவிக்கப்பட்ட முறையீட்டை அடுத்து, இவ் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதன்படி—

விசேட பாதுகாப்புப் படையினர் பதுளை மாவட்டத்தில் உள்ள தோட்டங்களுக்கு அவசரமாக அனுப்பி வைக்கப்பட்டனர்.

தோட்டத் தொழிலாளர்கள் அச்சமின்றி நாளை வாக்களிப்பதை உறுதிப்படுத்தவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

தோட்டத் தொழிலாளர் மீது காடைத்தனம் கட்டவிழ்த்துவிடப்படக் கூடிய அச்சுறுத்தல் இருப்பதாக அமைச்சர் தொண்டமான் அரச உயர்பீடத்துக்கு எடுத்துக் கூறியுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

ரஜீவ் - ஜே.ஆர். ஒப்பந்தவேளை வரம்புமீறி நேர்ந்தவர்கள்

## வாசுவின் உரையை மட்டும் கண்டிப்பதை ஏற்க முடியுமா?

### அஸ்கிரிய பீடாதிபதி கேள்வி எழுப்புகிறார்

கொழும்பு, ஓக. 15

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் வடக்கு - கிழக்கு மாகாணத்தை இணைக்கும் பிரகடனத்தை 1987 இல் அப்போதைய ஜனாதிபதி ஜெயவர்த்தனா வெளியிட்ட போது வாய்மூடி மௌனிகளாக இருந்த பௌத்த தலைவர்கள் வாசுதேவ நாணயக்கார தொலைக்காட்சி உரையில் தமிழர் தாயகம் பற்றி வலியுறுத்தியதை நாட்டைப் பிளவுபடுத்தும் பேச்சு என்று கண்டிப்பது ஏனோ?

அஸ்கிரிய பீடாதிபதி வண. பலிப்பான சந்தானந்த மாநாயக்க தேரர் விடுத்த அறிக்கையில் முன்கண்டவாறு கேட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மாநாயக்கர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

நாணயக்காரவின் தொலைக்காட்சிப் பேச்சைப் பாரதூரமாக எடுக்கக்கூடாது. பதவிக்கு வந்தவுடன் அரசியல் கட்சிகள் தாங்கள் அளித்த உறுதிமொழிகளை மறந்து விடுவார்கள்.

பதவிக்கு வந்த அரசியல் கட்சிகள் தேர்தலில் மக்கள் ஏற்றுக்கொள்ளாத துப்பாக்கிகளைத்தான் பலதடவை எதிர்ப்புகளுக்கு மத்தியில் செய்து கொண்டுள்ளன.

— இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பௌத்தத்துக்கு எதிராகத் தவறிழைத்தால்

## மகாசங்கத்திலிருந்தும் கூட தேரர்களை வெளியேற்றலாம்

### மகாநாயக்கருக்கு ம.ஐ.மு. பிரமுகர் பதிலடி

கொழும்பு, ஓக 15

வாசுதேவ நாணயக்காரவின் "தமிழர் தாயகம்" பற்றிய பேச்சுக் குறித்து அஸ்கிரிய பீடாதிபதி வெளியிட்ட கருத்தைக் கண்டித்து, மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர்களில் ஒருவரான டாக்டர் குணதாஸ அமரசேகரா பதில் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் தவறிழைக்கும் பௌத்த மதகுருமார்களை மகாசங்கத்திலிருந்து வெளியேற்றலாம் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

மகாநாயக்கரின் கருத்து பௌத்தர்களையும் நாட்டின் புத்திஜீவிகளையும் அவமானப்படுத்துவதாக அமைந்துள்ளதாக அவர் தெரிவித்திருக்கிறார்.

"மகாநாயக்கரின் கருத்து ஒருதலைப்பட்சமானதாகும்.

"அஷ்ரப் - சந்திரிகா ஒப்பந்தம் பற்றிய உண்மைகளை மூடிமறைப்பதில் மகாநாயக்கர் ஈடுபட்டுள்ளார்.

அஷ்ரப் அவரிடம் காட்டிய ஒப்பந்த பத்திரம் போலியானது என்பது அவருக்கு தெரியாதா?

தனிப்பட்ட லாபம் கருதாது பௌத்த சாசனத்தைப் பாதுகாப்பதற்காக பாடுபடும் காமினி ஜெயசூரியா போன்ற பௌத்த தலைவர்களை எல்லாம் அஸ்கிரிய மகாநாயக்கர் அவமானப்படுத்திவிட்டார்.

பௌத்தத்தை பாதுகாப்பதும் பேணுவதும் மகாசங்கத்துக்கு மட்டும் உரியதல்ல, ஒவ்வொரு பௌத்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நியாயமான தீர்வை வைத்தால் பேச்சுக்கு வருவார் பிரபா!

### நம்பிக்கை தெரிவிக்கிறார் சந்திரிகா

கொழும்பு, ஓக. 15

"தமிழர் பிரச்சினைக்கு நியாயமான தீர்வுத் திட்டம் ஒன்றை நாம் முன்வைத்தால் விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரன் பேச்சு நடத்த முன்வருவார்"

— இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டார் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பிரதித் தலைவியான சந்திரிகா குமாரணதுங்க.

நேற்று செய்தியாளர் மாநாட்டில் "உங்களுடன் பேச்சுவார்த்தை நடத்த திரு. பிரபாகரன் முன் வருவாரா?" என்று கேட்கப்பட்ட போதே மேற்கண்ட நம்பிக்கையை அவர் வெளியிட்டார். இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:

நாம் அமைக்கும் புதிய அரசின் முன்னுரிமை பெற்ற விடயங்களில் ஒன்றாக இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண விடுதலைப் புலிகளுடனும் ஏனைய தமிழ்க் குழுக்களுடனும் பேச்சுவார்த்தை நடத்துவது அமையும்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் கூட்டணிக்கு 7 இடங்கள் குமார் அணிக்கு 3 ஆசனங்கள்

### இருதரப்பும் வெளியிடும் நம்பிக்கை

கொழும்பு, ஓக. 15

"எனது சுயேச்சைக் குழுவுக்கு கொழும்பில் 50 ஆயிரம் வாக்குகள் கிடைத்தால் ஓர் ஆசனம் கிட்டும்.

"எழுபதாயிரம் வாக்குகள் கிடைத்தால் இரு ஆசனங்கள் கிடைக்கும். அத்துடன் 'போனஸ்' ஆக மேலும் ஓர் ஆசனம் கிடைக்கும்.

"மொத்தம் மூன்று இடங்கள் கிடைக்குமென நம்புகிறேன். எல்லாம் இறைவன் செயல்"

— இவ்வாறு குமார் பொன்னம்பலம் தெரிவித்ததாக செய்தி ஏஜன்ஸி ஒன்று தகவல் வெளியிட்டது.

யாருக்கும் பெரும்பான்மை கிடைக்காமல் தொங்கு நாடாளுமன்றம் ஏற்படுமாயின —

தமது அணி எந்தக் கட்சியையும் ஆதரிக்காது என்றும் குமார் கூறினார்.

அத்தகைய சந்தர்ப்பத்தில் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் இரு சிங்களக் கட்சிகளுக்கும் நெருக்குதல் கொடுப்போம் என்றும் அவர் சொன்னார்.

தமிழர் விடுதலைக் கூட்ட

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் "தேவி அக்கா" குண்டுடன் நடமாட்டமாம்!

### தலைநகரில் தமிழர்கள் பலர் விசாரணையில்!

கொழும்பு நகரிலும் சுற்று வட்டாரங்களிலும் தமிழர்களை விசாரணை செய்யும் நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

"தேவி அக்கா" என்னும் பெண் குண்டுடன் கொழும்பில் நடமாடுவதாகவும்—

அவரைக் கைது செய்யும் நோக்குடனேயே இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் — படையினர் தெரிவித்துள்ளனர்.

பொலிஸார் பாதுகாப்பு வழங்க இராணுவத்தினரும், கடற்படையினரும் கூட்டாக தேடுதல் நடத்துவதாகவும்—

பஸ்களில் இருந்து தமிழர் இறக்கப்பட்டு விசாரிக்கப்படுவதாகவும்—

விசாரணையின் பின் ஒரு சிலர் கைது செய்யப்படுவதாகவும்—

மேலும் தெரிவிக்கப்பட்டது.

## பூநகரிப் பகுதியில் வியாழன் எட்டு வேங்கைகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஓக. 15

கடந்த 11 ஆம் திகதி பூநகரிப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் ஒன்று இடம்பெற்றது.

இம் மோதலில் எட்டுப் போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

அவர்களின் விவரம் வருமாறு:-

★ மேஜர் பீலிக் அல்லது அதிரதன் (வீரசிங்கம் செல்வராசா - இளவாலை)

★ மேஜர் நவம் அல்லது அல்பேர்ட் (செல்லத்தம்பி இருபராஜா - ஒட்டுசுட்டான்)

★ மேஜர் இளந்தேவன் அல்லது அவன் (செல்லையா ஜெபசீலன் - வவுனியா)

★ கப்டன் முருகன் அல்லது மதுகமல் (இராமச்சந்திரன் ஸ்ரீராஜ் — வல்வெட்டித்துறை)

★ கப்டன் இலக்குவன் அல்லது ஜோதிராஜ் (சண்முகம் மருதைக்குமார் - வவுனியா)

★ கப்டன் குமாரன் அல்லது சுகு (சுப்பிரமணியம் சந்திரகுமார் - மன்னார்)

★ லெப்டினன்ட் சுமன் (சோமசுந்தரம் சிவகுமார் - சாவகச்சேரி)

★ 2ஆம் லெப்டினன்ட் பிரசாந்தன் அல்லது வாணன் (திலையம்பலம் ஸ்ரீகாந்த் — மட்டக்களப்பு) (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ.நா. தூதரக ஏற்பாட்டில் ... முகத்திலிருந்து

# அகதிகளைக் கூட்டி வரும் பணி இடைநிறுத்தப்பட்டது

யாழ்ப்பாணம், ஓக. 15

தமிழகத்தில் இருந்து ஈழ அகதிகளை அழைத்து வரும் நடவடிக்கைகளை தற்காலிகமாக நிறுத்த அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழகத்தில் இருந்து திரும்பியவர்களில் யாழ்ப்பாணம் பகுதியில் வாழ்ந்தவர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்குவதற்கு இலங்கை அரசு தவறிவிட்டதால் தொடர்ந்தும் இந்தியாவில் இருந்து அகதிகளை அழைத்துச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக ஐ.நா. அகதிகள் தூதரகம் இந்திய அரசுக்கும், தமிழக அரசுக்கும் தெரிவித்துள்ளது.

ஒகஸ்ட் மாதத்தில் இருந்து கப்பல் மூலம் ஈழ அகதிகளை அழைத்துச் செல்ல இந்த அமைப்பு ஏற்கனவே முடிவு செய்திருந்தது.

யாழ்ப்பாணம் - குருநகர்ப் பகுதிக்கு திரும்பியவர்களில் இருவர் இலங்கைக் கடற்படையால் சுட்டுக் கொல்லப்பட்டவுள்ளதாகவும்—

ஒருவர் காணாமல் போயுள்ளதாகவும்—

ஒருவர் காயமடைந்துள்ளதாகவும்—அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

தாயகம் திரும்பும் ஈழ அகதிகளின் பாதுகாப்புக்கு இலங்கை அரசு உத்தரவாதம் தரும்வரை ஈழ அகதிகளை அழைத்துச் செல்லும் நடவடிக்கையை இடைநிறுத்தம் செய்யப் போவதாக ஐ.நா. அகதிகள் தூதரகம் இந்திய அரசுக்கு அறிவித்துள்ளது. (எ-3)

ஹுணுப்பிட்டி பகுதியில்

# சட்டவிரோத தேர்தல் பிரசுரங்கள் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டன

வாக்களிப்பு தினத்துக்கு முதல் நாள் வெளியிடுவதற்காக அச்சிடப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த லட்சக்கணக்கான சட்டவிரோத பிரசுரங்களை ஹுணுப்பிட்டியவில் உள்ள வர்த்தக சம்பவி களஞ்சியத்திலிருந்து பொலீஸார் கைப்பற்றியுள்ளனர்.

மேற்படி சட்டவிரோத பிரசுரங்கள் மறைத்து வைக்கப்பட்டிருப்பது பற்றி எதிர்க்கட்சி தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா மனு ஒன்றை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார். அந்த மனுவைப் பரிசீலித்த கோட்டை நீதிவான் சம்பந்தப்பட்ட இடத்தில் இருந்த அவற்றைக் கைப்பற்றுமாறு உத்தரவிட்டார். அதனைத் தொடர்ந்தே அப் பிரசுரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. (ஐ 6)

எதிரணிப் பிரதிநிதிகள்

# வாக்குப் பெட்டிகளுக்கு காவலாக செல்வதை தடுக்கவே ஊரடங்கு

## சு. க. சட்ட ஆலோசகர் விளக்கம்

கொழும்பு, ஓக. 15

தேர்தல் முடிந்த கையோடு ஊரடங்குச்சட்டத்தை அமுல் நடத்த அரசு தயாராகி வருவது வாக்களிப்பு நிலையங்களில் இருந்த வாக்குப்பெட்டிகளை வாக்குகளை எண்ணும் நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்படும்போது அவற்றுடன் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பிரதிநிதிகள் செல்வதைத் தடுப்பதற்கேயாகும்.

சுதந்திரக்கட்சியின் சட்ட ஆலோசகர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் இத் தகவலை செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அரசு ஊரடங்கை அமுல் நடத்தி குழப்பநிலையை ஏற்படுத்தினால் தேர்தல் முடிவுகளை நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை— ஊரடங்கு காலத்தில் பயணஞ் செய்வதற்கு வழங்கப்படும் அனுமதிப் பத்திரங்கள் சகல பொலீஸ் நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று அதிகாரிகள் ஒப்புக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. [எ-6]

# வட-கிழக்கு தேர்தல் முடிவு பிந்தியே வெளியாகலாம்

## தேர்தல் ஆணையாளர் தகவல்

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வாக்குகள் எண்ணப்படுவதில் தாமதம் ஏற்படலாம் என்று தேர்தல் ஆணையாளர் சந்திரிரா னந்த டீ சில்வா தெரிவித்திருக்கிறார்.

எவ்வாறாயினும், வியாழக்கிழமை பிற்பகலுக்குள் இறுதித் தேர்தல் முடிவு அறிவிக்கப்படும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார். முதலாவது தேர்தல் முடிவு நாளை நள்ளிரவு காக்கில் வெளியாகலாம் என்று அவர் கூறினார்.

இதனிடையில்—நாடு எங்கிலும் உள்ள 9 ஆயிரத்து 579 வாக்களிப்புநிலையங்கள், ஆயிரத்து 188 வாக்கு எண்ணும் நிலையங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் சுமார் ஒருலட்சம் ஊழியர்கள் தங்கள் கடமைகளைப் பொறுப்பேற்பதற்காகப் புறப்பட்டுச் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (எ-5)

ஆளும் கட்சியின்

# சுவரொட்டிகளில் தார் பூசிய 8 பொலீஸார் இடமாற்றம்

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் சுவரொட்டிகள் மீது தார் பூசியது என்ற முறைப்பாட்டின் பேரில் கொழும்பு வடக்கு பொலீஸ் அதிபர் ஜெராட் இக்னேஷியஸ், ஐம்பெட்டா பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யு எம் சந்திரதிலக ஆகியோர் முறையே பொலீஸ் தலைமைக் காரியாலயத்துக்கும் வவுனியாவிற்கும் இடமாற்றஞ் செய்யப்பட்டனர்.

ஐ.தே.க. வேட்பாளர்களின் சுவரொட்டிகள் மீது தார் பூசிய இவர்கள் பொ.ஐ.மு. வேட்பாளர் ஏ. எச். எம். பௌஸியின் சுவரொட்டி மீது தார் பூசவில்லை என்றும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதுளைமாவட்ட ஐ.தே.க. வேட்பாளர் லஷ்மன் செனவிரத்னாவின் முறைப்பாட்டின் மீது மகியங்கனை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி தாய பந்துல குணரத்னா பொலீஸ் தலைமையகத்துக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டார். தமது சுவரொட்டி மீது தார் பூசியதாகவும் கட்சியின் கொடிகளைக் கிழித்தெறிந்ததாகவும் திரு. செனவிரத்னா முறையீடு செய்திருந்தார்.

அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்காவின் முறைப்பாட்டைத் தொடர்ந்து முதலில் நுவரெலியாவுக்கு இடமாற்றம் செய்யப்பட்ட ஹஸலக பொலீஸ் பொறுப்பதிகாரி குபசிங்க-பண்டாரா பின்னர் கண்டிக்கு மாற்றம் செய்யப்பட்டார். ராஜாங்க அமைச்சர் மெர்வின் சூரியின் முறைப்பாட்டிற்கிணங்க களுத்துறை மாவட்ட பிரதிப் பொலீஸ் மா அதிபர் பீ. வி. சுமணசேகராவும் சிரேஷ்ட பொலீஸ் அதிபர் ஜகத் ஜெயவர்த்தனாவும் தலைமைக் காரியாலயத்துக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டனர்.

தேர்தல் நியமனதினத்தன்று வன்செயல் இடம் பெற அனுமதித்ததற்காக பக்கமுனை உதவிப் பொலீஸ் அதிபர் யு ஏ தர்மசேன வவுனியாவுக்கும் இ. ஸ்பெக்டர் ஆ'யபால குணசேகரவும் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தனர். (எ)

வன்முறை வெடிக்கும் என்ற பீதியால்

# பொருள்களை வாங்குவதில் தென்பகுதி மக்கள் மும்முரம்

கொழும்பு. ஓக 13

பொதுத் தேர்தலைத் தொடர்ந்து வன்செயல்கள் வெடிக்கலாம் என்ற பீதி பரவியுள்ளதை அடுத்து தென் பகுதியில் உள்ள மக்கள் அத்தியாவசியப் பொருள்களை கொள்வனவு செய்வதில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர் என ஏஜென்ஸி செய்தி ஒன்று தெரிவித்தது.

தேர்தலை தொடர்ந்து ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்படும் என மக்கள் எதிர்பார்ப்பதாகவும் — தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை —

சீனி, மா, பருப்பு, எரிபொருள்கள் உட்பட அத்தியாவசிய பொருள்கள் போதுமான அளவு கையிருப்பில் உள்ளதாக நேற்று வெளியான அரசு அறிவிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# வேட்பாளர் மீது வாள்வெட்டு

கொழும்பு, ஓக 15

கேகாலை மாவட்டத்தில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் வேட்பாளரான சட்டத்தரணி மஹிபால ஹேரத் கடந்த வியாழன் இரவு வாள்வெட்டுக்கு ஆளானார்.

வேட்பாளர் ஒருவர் தாக்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும் என்று சொல்லப்படுகிறது. (ஐ-எ-6)

# சந்திரிகாவின் கோரிக்கை

கொழும்பு ஓக 15

எதிர்வரும் பொதுத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு வாக்களிக்குமாறு கோரி படையினருக்கு கடிதம் அனுப்ப தமக்கு வாய்ப்பளிக்கும்படி சந்திரிகா குமாரணதுங்க இராணுவத் தளபதிக்கு நேற்று முன்தினம் கடிதம் அனுப்பினார்.

படையினரின் ஆதரவு கோரி ஐ. தே. க. பொதுச் செயலர் இராணுவத் தளபதியூடாக கடிதம் அனுப்ப அனுமதித்தது போன்று தமக்கும் அனுமதி தருமாறு அவர் தமது கடிதத்தில் கோரியுள்ளார்.

சந்திரிகா அனுப்பிய கடிதம் தமக்கு இன்னும் கிடைக்கவில்லை என்று இராணுவத் தளபதி பி.பி. ஸில்வா தெரிவித்தார். (ஐ-எ-6)

# எதிரணிப் பத்திரிகைகள் அழிப்பு

கொழும்பு. ஓக 15

கொழும்பு நகரிலும் சுற்றுப்புறங்களிலும் 'ராவய' உட்பட எதிரணிப் பத்திரிகைகளின் பிரதிகளை ஆயுதக்குழுக்கள் பணம் செலுத்தி மொத்தமாக வாங்கி அழிப்பதில் ஈடுபட்டிருந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இத்தகவலை ... ரியர் விக்டர் ஐவன் வெளியிட்டார். (எ-6)

யாழ் நகர பழக்கடைகளில்

# போமலின் தெளிக்கப்பட்ட மாமபழங்கள் கண்டு பிடிப்பு

யாழ்ப்பாணம், ஓக 15

உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் போமலின் நச்சு மருந்து தெளிக்கப்பட்டுபழுக்க வைக்கப்பட்ட ஒரு தொகை மாம்பழங்கள் யாழ். நகரில் உள்ள இரு பழக்கடைகளில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

யாழ். நகர்ப்புற பொதுச் சுகாதாரபரிசோதகர் திரு. து மகாதேவன் உணவுப் பரிசோதகர் திரு. ஏ. ஜீவநாதன் ஆகியோர் சம்பந்தப்பட்ட பழக்கடைகளில் திடீர் சோதனை நடத்தி மேற்படி மாம் பழங்களை கண்டு பிடித்தனர். பின்னர் அந்த மாம் பழங்கள் பறிமுதல் செய்யப்பட்டு அவ்விடங்களிலேயே அழிக்கப்பட்டன. (ஐ-111)

# அராலியில் கைப்பற்றிய ஆயுதங்களின் விவரம்

யாழ்ப்பாணம், ஓக. 15

அராலி கடற்பகுதியில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட அதிரடித் தாக்குதலில் படையினரிடமிருந்து விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விவரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| ★ ரி 56 - 2 ரக துப்பாக்கி | — | 02 |
| ★ ரி 81 ரக துப்பாக்கி | — | 02 |
| ★ ரி 56 புதிய ரகத் துப்பாக்கி | — | 02 |
| ★ தொலைத் தொடர்பு கருவி | — | 01 |
| ★ ஏ. கே. மகஸின் | — | 12 |
| ★ ரி 81 மகஸின் | — | 06 |
| ★ நடுத்தர ரவைகள் | — | 230 |
| ★ ஏ. கே. ஹோல்ஸர் | — | 03 |
| ★ நீர் காப்பு குண்டு | — | 13 |
| ★ சுவற்றின் ஹோல்ஸர் | — | 03 |
| ★ நீச்சல் சப்பாத்து | — | 01 |
| ★ நீச்சல் கண்ணாடி | — | 02 |
| ★ பெற்றோல் தாங்கி | — | 02 |
| ★ வயர் | — | 01 |
| ★ பெற்றோல் | — | 25லீற்றர் |
| ★ 40 குதிரை வலு இயந்திரம் | — | 01 |

(ஐ)

# நாட்டை விட்டு வெளியேற டி.பியின் ஆலோசகர் திட்டம்

## சு. க பொதுச்செயலர் தகவல்

கொழும்பு, ஓக. 15

தேர்தலுக்கு முன்புநாட்டை விட்டு வெளியேறுவதற்கு ஜனாதிபதியின் விசேடஆலோசகரான டாக்டர் விக்ரமவீரசூரியா திட்டமிட்டிருக்கிறார் என்று கொழும்பில் செய்தி வெளியாகியுள்ளது.

சுதந்திரக் கட்சிப் பொதுச் செயலாளர் திரு. தர்மசிறி சேனநாயக்கா வெளியிட்ட தகவலின் படி வெளிநாடு செல்வதற்கு டிக்கெட் பதிவு செய்யும் படி சிங்கப்பூர் விமான சேவை நிறுவனத்தை டாக்டர்வீரசூரியா கேட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது பற்றிக்கருத்து வெளியிடுகையில், தேர்தல் முடிவடைவதற்கு முன்பு தாம் நாட்டை விட்டு வெளியேற எண்ணவில்லை என்று டாக்டர் வீரசூரியா தெரிவித்தார்.

இதற்காக டிக்கெட் வழங்கும் படி தாம் சிங்கப்பூர் விமான சேவைநிறுவனத்தைக் கோரவில்லை என்றும் —

அந்த நிறுவனம் தமக்கு டிக்கெட் தர முன்வரவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-எ)

# ஐ. தே. க. செயலர் விடுக்கும் எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 15

பொதுமக்கள் ஐக்கிய முன்னணித்தலைவர்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் வன்செயல்கள் பற்றிய பிரசாரமும் ஆளும் கட்சியின் ஆதரவாளர்களைத் துன்புறுத்துவதும் தொடரின், தேர்தல் காலத்தில் கட்டுப்படுத்தப்படமுடியாத அளவுக்கு வன்செயல் வெடிக்கும்.

ஐ. தே. க. பொதுச்செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா முன்கண்டவாறு எச்சரித்திருக்கிறார்.

ஏ. எப். பி. செய்தி ஸ்தாபனம் இத்தகவலை நேற்று வெளியிட்டது. (எ-6)

# தேர்தல் பற்றிய கருத்தரங்கு

யாழ்ப்பாணம். ஓக 15

யாழ்ப்பாண சஞ்ஞான சமத்தின் சமூக விஞ்ஞானப் பீடத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள 'இலங்கையின் தேர்தல்களும் தேர்தல் மாவட்டங்களும் விகிதாசாரப் பிரதிநிதித்துவமும் பற்றிய ஒரு பகுப்பாய்வு' என்ற விடயம் தொடர்பான கருத்தரங்கு இன்று திங்கள் பிற்பகல் 3 00 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக புவியியற்றுறை விரிவுரை மண்டபம் இலக்கம்-2 இல் நடைபெறும்.

யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடாதிபதியும் புவியியற் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை மேற்படி விடயம் தொடர்பாக உரை நிகழ்த்துவார். (இ)

# வானொலியில் மருதமடுப்பதி நிகழ்ச்சி

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சிற்றி எப். எம். சேவையில் இன்று 15ஆம் திகதி இரவு ... மருதமடுப் பதியின் சிறப்பு நிகழ்ச்சி ஒலிபரப்பாகும். (எ)

# "குற்றப்பத்திரிகை" படத்துக்குத் தடை!

சென்னை, ஓக: 15

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியின்கொலையைத் தழுவி தமிழில் எடுக்கப்பட்ட "குற்றப்பத்திரிகை" திரைப்படத்துக்கு சென்னை உச்ச நீதிமன்றம் தடை விதித்திருக்கிறது.

இந்திய தகவல் அமைச்சின் விண்ணப்பத்தின் பேரில் அந்தத் தடை விதிக்கப்பட்டதாக பி. ரி. ஐ. செய்தி நிறுவனம் தெரிவித்தது.

விடுதலைப் புலிகளின் புகழ் பாடுவதாகக் கூறி, இப்படத்துக்கு தணிக்கைக் குழுவினர் ஏற்கனவே அனுமதிச்சான்றிதழ் வழங்க மறுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-3)

# பாக் பிரஜை கைதானார்!

கொழும்பு, ஓக 15

ஐநூறு கிராம் ஹெரோயின் போதைப் பொருளை இலங்கைக்குள் கடத்த முயற்சித்த பாகிஸ்தான் பிரஜை ஒருவரை கொழும்பில் சுங்கத் திணைக்கள அதிகாரிகள் கைது செய்தனர் என அறிவிக்கப்படுகிறது.

கொழும்பில் தற்போது நடைபெறும் இலங்கை-பாகிஸ்தான் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியைப் பார்ப்பதற்காக தாம் இலங்கை வந்ததாக அச்சந்தேக நபர் தெரிவித்தார்.

போதைப்பொருளை அவர் தமது சப்பாத்துக்குள் மறைத்து வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. (ஒ-எ)

# வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஓக 15

கடந்த மே மாதம் 7 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்தில் படையினருடன் ஏற்பட்ட மோதலில் மூன்று போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

★ கப்டன் தேசன் அல்லது இளங்குமணன் (பாலசிங்கம் ஜெயபாலன் — உரும்பிராய் தெற்கு)

★ லெப்டினன்ட் மன்மதன் அல்லது அஜித் (தங்கராசா முருகன் — மட்டக்களப்பு)

★ 2 ஆம் லெப். செல்வம் அல்லது பல்லவன் (செல்லத்துரை நந்தகுமாரன் — ... தெற்கு) ஆகிய மூவருமே வீரச்சாவடைந்தனர். (ஐ-4)


# கண்டல் மரங்களை காத்திடுவோம் கடல் அரிப்பைத் தடுத்திடுவோம்

"கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் ஜெபம் பண்ண வேண்டும்." — 1. தீமோத்தேயு. 2:1, 2

# தேசத்திற்காக ஜெபம்

காலம்: 16-08-1994 காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை

இடம்: அசெம்பிளி ஒவ் கோட் ஆலயம், கண்டி வீதி, சாவகச்சேரி. (உதவி அரச அதிபர் பணிமனை அருகே)

மத, சபை சார்பற்று அனைவரும் தேசத்திற்காக ஜெபிக்க வருக.

(பிரவேசம் இலவசம்)

(32392)

# 41 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

## அமரர் அப்பாக்குட்டி செல்வரட்ணம்

தோற்றம்: 26 - 06 - 1926

மறைவு: 06 - 07 - 1994

எங்கள் குடும்பத் தலைவர்

அமரர் அப்பாக்குட்டி செல்வரட்ணம் அவர்களின்

41ஆம் நாள் நினைவு நாளான

இன்று (15-08-1994) திங்கட்கிழமை அன்னாரின் ஆத்மசாந்திக்கான பிரார்த்தனையும், அந்தியேட்டி கிரியைகளும் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஞானப்பிரகாசர் வீதி, உடுவில். (32393)

# கண்ணீர் அஞ்சலி

யா/கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

ஆசிரிய மாணவன் திரு. லோ. கிரேதாகரன் அவர்களின் தந்தையார்

அச்சுவேலியைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர்

## ஆ. லோகேஸ்வரன் அவர்கள்

13-8-94 எறிகணைத் தாக்குதலில் காயமுற்று 14-8-94 இயற்கை எய்தியதை அறிந்து அதிர்ச்சியுற்றோம்.

ஆசிரிய மாணவனுக்கும் அவரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரிய மாணவர்
கோப்பாய் ஆசிரிய கலாசாலை

(32397)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## மாரிமுத்து சிவஞானம் (தியாகு)

மலர்வு: 19 - 10 - 1937

உதிர்வு: 16 - 07 - 1994

அன்பின் உறைவிடமாய் பாசத்தின் பிறப்பிடமாய் குடும்பத்தின் ஒளி விளக்காய் இருந்து எம்மை நல்வழிப் படுத்திய எமது அன்புத் தெய்வத்தின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

V.C. முன்பாக பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு. (32390)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சில்லையூரின் பாதுகாவலி

# சில்லாலை கதிரைமாதா ஆலய உற்சவ சிறப்பிதழ்

# காண ஆயிரம் கண் வேணும் திவ்ய கருணாகரத் தாயை




மாதகல் இராணுவக் கிராமமானது
சில்லாலைக்கு "எறி" விழல் கிராமமானது
எத்தனை தடவை எத்தனித்தவர்கள்
கோபுர வாசலுடன் திரும்பி ஏகினர்
எல்லைகள் எங்களை அண்மித்த போதிலும்
எங்கள் ஊரினை இன்றும் பார்க்கிறோம்
எங்கள் மண்ணினை இன்றும் மிதிக்கின்றோம்
கதிரையில் இருந்து இரங்கும் அன்னையின்
கருணை மழையில் நாங்கள் நனைகிறோம்
கூவி வரும் எறிகணையின்
குறிக்கு நாங்கள் தப்பி வருகின்றோம்
அன்னையின் அற்புதம் அபரிதமானது
அவளது கண்ணொளி தண்மையானது
அவளது ஆசனம் வல்லமை மிகுந்தது
அன்னை ஆலயம் எழுந்து நிற்குது
அன்னை கதிரையில் அமர்ந்திருக்கிறாள்
எங்கள் காவலாய் எழுந்திருக்கிறாள்
கதிரையில் இருந்து இரங்கும் தாயே
சில்லையம்பதியின் சீர் மிகு அரசியே
உன் பாதம் சூழ நாங்கள் வாழ
நாளை விரைவில் தாரும் தாயே.

## ஆசிச்செய்தி

தம் சொந்த மனைவிட்டு இடம்பெயர்ந்த நிலையில் தம் பாதுகாவலியின் அருளையும், பாதுகாப்பையும் உணர்ந்த பங்கு மக்கள் இறைவனின் அன்னையும், தம் முந்தையரதும், தம்முடையதும் குல தெய்வமுமான கதிரைச் செல்விக்கு விழா எடுப்பதும், ஆபத்து சூழல் யுத்தமுனையாகிய சூழலிலும் அன்னையின் விழாவை அந்த மண்ணிலே பெருமுயற்சி எடுத்து நடத்துவதும் அன்னை மீதான அவர்களின் பற்றை கதிரைச்செல்வி அவர்களுக்கும் அனைவருக்கும் நிம்மதிப் பெருவாழ்வையும் அமைதியையும் விரைவில் பெற்றுக்கொடுப்பாளாக.

வரும் வருடம் திருத்தந்தை 2 ஆம் அருளப்பர் சின்னப்பரால் கொழும்பில் முத்திப் பேறுபெற்ற பட்டம் பெறவிருக்கும் ஆசீ. யோசவாஸ் முனிவர் அடிகள் தம் யாழ்ப்பாணப் பணியின் பெரும்பகுதியை (1687-1689) சில்லாலையை பாதுகாப்பான தங்குமிடமாகக்கொண்டு ஆற்றினார். அவ்வூர் மக்கள் அவரை ஒல்லாந்த வேத விரோதிகளிடம் இருந்து காத்தது இவ்வேளையில் நினைவூட்டப்பட வேண்டியதே.

அருட் திரு அ. பெ. பெனற் அடிகள்
சண்டிலிப்பாய் பங்குத்தந்தை.



அன்னையிடம் இருந்து பெற்றுக்கொண்ட அனைத்து நன்மைகளுக்கு நன்றி அவளின் பெயரும்; புகழும், அற்புதமும் அனைவராலும் அறியப்படுவதாக.

– ஓர் அடியாள்.

இதழ் அமைப்பு:
ஞா. சுரேஸ்வரன்

GIVE LONG LIFE
TO YOUR MEMORABLE EVENTS IN LIFE
THROUGH LIFE PHOTO STUDIO

உங்கள் வாழ்வின் நினைவு கூரத்தக்க நிகழ்வுகளுக்கு நீண்ட ஆயுள் கொடுக்க

வாழ்நாள் படப்பிடிப்பகம்

யாழ்ப்பாண வீதி,
மானிப்பாய்.
(மகளிர் கல்லூரி அருகில்)




பல்லுருகலப்பு நுட்பம் (Mixing) மூலம்
கலை அம்சம் பொருந்திய
படப்பிடிப்புச் சேவை

# கண்டி நகரில் 10 லட்சம் கள்ள வாக்குச் சீட்டுக்கள்

## தேர்தல் ஆணையாளரிடம் முறையீடு

கொழும்பு, ஓக. 15

கண்டி நகரில் பல மறைவிடங்களில் சுமார் பத்துலட்சம் கள்ள வாக்குச் சீட்டுகள் பதுக்கிவைக்கப்பட்டுள்ளன என்று பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் டி. எம். ஜயரத்தினா தேர்தல் ஆணையாளருக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

கண்டியில் உள்ள ஜனாதிபதி மாளிகை, கிங்ஸ்வர் தேர் வர்த்தகக் கட்டடத்தில் உள்ள பல மறைவிடங்கள் ஆகியவற்றில் இக்கள்ள வாக்குச் சீட்டுகள் மறைத்து வைக்கப்பட்டுள்ளன என்று தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பிய கடிதத்தில் திரு ஜயரத்தினா தெரிவித்திருக்கிறார்.

இக்கள்ளவாக்குச் சீட்டுக்களை கொழும்பில் உள்ள அச்சகம் ஒன்றில் இருந்து, மகாவலி அமைச்சின் வாகனங்களில், அமைச்சு அதிகாரிகள் சிலர் கண்டிக்கு ஏற்றி வந்தனர் என்றும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-எ-6)

### முறைப்பாடு எதுவும் கிடைக்கவில்லை என்கிறார் தேர்தல் ஆணையாளர்

கண்டி மாவட்டத்தில் கள்ள வாக்குச் சீட்டுகள் மறைத்து வைக்கப்பட்டிருப்பது பற்றிய பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் அனுப்பிய முறைப்பாட்டுக் கடிதம் நேற்று முன்தினம் மாலை 4.30 வரை தமக்கு கிடைக்கவில்லை என்று தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா தெரிவித்தார்.

எனினும் முன்னணியின் பொதுச் செயலாளர் இவ்விஷயம் குறித்து பொலிஸ் தலைமைக் காரியாலயத்துக்கே முதலில் முறைப்பாட்டை அனுப்பியிருக்கவேண்டும் என்றும் அவர் கூறினார்.

பொலிஸ் தலைமைக் காரியாலயத்தின் மூலம் இம் முறைப்பாடு தமக்குவரின் தாம் தீவிர விசாரணையை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

பொறுப்புள்ள எவரும் பொலிஸாருக்கு இது பற்றி முறையிடின் தாம் இது பற்றி நடவடிக்கை எடுப்பதில் தயக்கம் காட்டப் போவது இல்லை என்றும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

(இ-எ 6)

## ஜனாதிபதி மாளிகையில் சிறிய ஒலிபரப்பு கூடம்

### அவசரமாக அமைக்கப்பட்டதாம்!

கொழும்பு, ஓக. 15

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துடன் நேரடித் தொடர்புள்ள சிறிய ஒலிபரப்புக்கூடம் ஒன்று ஜனாதிபதி மாளிகையில் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து கிடைத்த தகவல்களை மேற்கோள் காட்டி "ராவய" ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்தார்.

ஜனாதிபதி மாளிகையில் இருந்து தேவையானவற்றை நேரடியாக ஒலிபரப்புவதற்காக இந்த விசேட சிறிய இணைப்பு ஒலிபரப்புக் கூடம் அவசரம் அவசரமாக ஜனாதிபதி மாளிகையில் அமைக்கப்பட்டுள்ளது என்றும் திரு. ஐவன் தெரிவித்தார்.

## திருநாவுக்கரசு மகாவித்தியாலய வைர விழா

யாழ்ப்பாணம், ஓக. 15

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகா வித்தியாலய "வைர விழா" வெகு விரைவில் கொண்டாடப்பட உள்ளது.

விழாவுக்கான ஆரம்ப ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்விழாவை முன்னிட்டு இப்பாடசாலையின் வரலாறு, இக்கிராமத்தின் வரலாறுகள் தயாரிக்கப்பட்டு வருவதோடு "வைரவிழா மலர்" ஒன்றும் வெளியிடப்படவுள்ளது.

இப்பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றிய இளைப்பாறிய அதிபர் திரு. கி. துரைசுவாமி, ஆசிரியராகக் கடமையாற்றிய இளைப்பாறிய ஆசிரியர்கள் ஆசிரியமணி ச. வேலுப்பிள்ளை, சமதான நீதவான் தி. கி. வைரமுத்து ஆகிய மூவரும் பட்டமளித்து பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படவுள்ளனர். (இ)

## காமினியின் ஏற்பாட்டில்

## தேர்தல் குளறுபடிகளில் ஈடுபட 50 பேருக்கு பயிற்சி

கொழும்பு, ஓக. 15

அமைச்சர் காமினி திஸநாயக்காவின் ஏற்பாட்டின் பேரில் ஐம்பது பேர் மகாவலி அதிகாரசபையின் பாதுகாப்புப் பிரிவில் சேர்க்கப்பட்டு தேர்தல் தந்திரோபாயங்கள் குறித்து அவர்களுக்கு விசேட பயிற்சி வழங்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ ல சு. கட்சி சேர்ந்த முன்னாள் எம். பியான அனுருத்த ரத்வத்த இத் தகவலை நேற்று முன்தினம் செய்தி ஏஜென்ஸிகளுக்கு வெளியிட்டார்.

1989 ஆம் ஆண்டு காலப் பகுதியில் செயற்பட்ட பாதாள உலகப் பேர்வழிகள் தற்போது கண்டிப் பகுதிக்குக் கொண்டு வரப்பட்டிருப்பதாகத் தெரிவதாகவும் அவர் கூறினார்.

இதற்கிடையில்—

கண்டிப் பகுதியில் கடந்த 11 ஆம் திகதி கண்டு பிடிக்கப்பட்ட—கள்ளவாக்குச் சீட்டுகளாக இருக்கும் எனக் கருதப்பட்டவை—உத்தியோகபூர்வ வாக்குச் சீட்டுகள் என்று தேர்தல் ஆணையாளர் தம்மிடம் தெரிவித்ததாக பொதுசன ஐக்கிய முன்னணியின் [illegible] கூறியுள்ளார்.

இந்த [illegible] அதிகாரிகளை தாம் கண்டிக்கு அனுப்பி வைத்திருப்பதாக தேர்தல் ஆணையாளர் அவரிடம் தெரிவித்துள்ளார். (க-6)

# படையினரின் ஆதரவை கோரியது தேர்தல் சட்டத்துக்கு முரணானது

## ஹமில்டனிடம் எதிரணியினர் பலத்த கண்டனம்

கொழும்பு, ஓக. 15

இராணுவத்தளபதி ஊடாக படையினரின் ஆதரவை கோரி ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் காமினி விஜேசேகரா அனுப்பிய வேண்டுகோள் தேர்தல் சட்ட விதிகளுக்கு முரணாக உள்ளது என்று பாதுகாப்பு அமைச்சுச் செயலாளருக்கு முறையிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிக்கும்படி இவ்வேண்டுகோளில் ஐ.தே.க. செயலர் படையினரைக் கோரியிருந்தார்.

கடந்த திங்கள் கிழமை பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க தலைமையில் நடைபெற்ற கட்சிகளின் செயலாளர்கள் கூட்டத்தில் ஐ.தே.க. செயலரின் இந்த நடவடிக்கைக்குப் பலத்த கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

ஐ.தே.க. செயலரும் இராணுவத் தளபதியும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

பங்குபற்றிய ஏனைய கட்சிகளின் செயலாளர்கள் இது பற்றிய எதிர்ப்பைத் தெரிவித்தனர். ஏனைய கட்சி செயலாளர்களின் கோரிக்கைக்கு இணங்க ஐ.தே.க. செயலரை கூட்டத்துக்குவரும்படி அமைச்சுச் செயலாளர் வனசிங்க கூட்ட ஆரம்பத்தில் தகவல் அனுப்பினார். (ஒ-எ)

## பொ.ஐ.முன்னணிவென்றால் கிராம அபிவிருத்தி சபைகள்

### உருவாக்குவோம் என்கிறார் சந்திரிகா

கொழும்பு, ஓக. 15

"நாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றால் கிராம சேவையாளர் பிரிவுகள் தோறும் "கிராம அபிவிருத்தி சபை"களை உருவாக்குவோம். அச்சபை ஊடாக அப்பகுதியில் உள்ள கனிப்பொருள்களையும் மூலவளங்களையும் பயன்படுத்தி தொழிற்சாலைகளை அமைப்போம்."

இப்படிக் கூறினார் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உப தலைவர் சந்திரிகா குமாரணதுங்க.

தம்புள்ள பகுதியில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது!

ஓகஸ்ட் 16 ஆம் திகதி நடக்கவிருக்கும் தேர்தலில் பொ. ஐ. மு. வெற்றிபெறுவதை எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது இங்கு கூடும் மக்களே இதற்குச் சாட்சி" என்றார்.

## வர்த்தக அமைச்சுக்குச் சொந்தமான 25 அரச வாகனங்கள் கல்முனைத் தேர்தல்பணியில்!

வர்த்தக மற்றும் வாணிபத்துறை அமைச்சுக்கு சொந்தமான 25 வாகனங்கள் தேர்தல் வேலைகளை மேற்கொள்வதற்காக கொழும்பில் இருந்து கல்முனைக்கு அனுப்பப்பட்டுள்ளன

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளது.

அமைச்சர் மன்சூருக்கு ஆதரவாக தேர்தல் பிரசார வேலைகளில் இவ்வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

ஜனாப் மன்சூர் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடுகிறார்.

இதேவேளை மல்லிகைக் காடு என்னுமிடத்தில் அமைச்சரின் ஆயுதம் தரித்த மெய்ப் பாதுகாப்பாளர் ஒருவரை முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவாளர்கள் பிடித்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## பதிவாளரை நிரந்தரமாக்க முடிவு

யாழ்ப்பாணம், ஓக. 15

யாழ். மாவட்டத்தில் 2 ஆண்டுகளாகப் பதில் கடமை புரியும் பதிவாளர்களை நிரந்தரமாக்க பதிவாளர் நாயகம் முடிவு செய்துள்ளார் என தெரிவிக்கப்பட்டது.

பதில்கடமை புரியும்பதிவாளர் விபரங்களை யாழ். பதிவாளர் அலுவலகம் கொழும்புக்கு அனுப்பியுள்ளது என அறியப்படுகிறது.

## வங்கிக்கடன் உதவி

வலிகாமம் தெற்கு, ஓக. 15

சுன்னாகம் இலங்கை வங்கி 17 விவசாயிகளுக்கு ஒரு லட்சத்து இருபதாயிரம் ரூபாவை குறுகிய கால கடனாக வழங்கியுள்ளது.

இக்கடன் தொகை மேற்படி வங்கி முகாமையாளர் திரு எஸ். விக்கினராசா வால் அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் வைத்து வழங்கப்பட்டது. (சு-152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சோனி T. V. 20 அங்குலர் மொடல் நம். KV 2030, சிறிய கட்டிலுக்குரிய ஆர் பிளோ குசன் மெத்தை என்பன விற்பனைக்குண்டு. சிறிதரன், இல. 16/3, விதானையார் வீதி, சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம். (32384)

3 Sri Model போசு பிறிபெக்ட் காரும், ஒஸ்டின் A 35 (2 Sri) ஸ்டேசன் வகன் காரும் விற்பனைக்கு உண்டு. இல. 32, இந்துக் கல்லூரி ஒழுங்கை, யாழ்ப்பாணம். (32374)

### உடன் விற்பனைக்கு

பெரிய நச்சின ஐந்து மாதங்கள் நிரம்பிய ஆண் அல்சேஷன் நாய்க்குட்டியும், ஒரு வயதுடைய பெண் பொமரேனியனும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: அ. குணரத்தினம், மடத்தடி, சந்தரோடை, சுன்னாகம். (32383)

### மணிக்கூடு திருத்துதல்

சகல மணிக்கூடுகளும் உத்தரவாதத்துடன் குறைந்த செலவில் திருத்திக் கொடுக்கப்படும். உதிரிப்பாகங்களுக்காக மணிக்கூடுகள் வாங்கப்படும். குடும்ப அட்டையுடன் வரவும். சகல மணிக்கூடு பற்றிகளுமுண்டு. சஜன் வாச்வேக்ஸ், 13 புகையிரத நிலைய வீதி, சுன்னாகம் சந்திக்கருகில். (7602)

### உற்சவகால விற்பனை

இந்திய, இலங்கை நாவல்கள் தொகையாகவும், சில்லறைக்கும், சைவ நீதிக் கதைகள், 1, 2, 3, 4, 5, 6 பாகம் புதியவை. சமய புராணப் புத்தகங்கள், இந்திய சஞ்சிகைகள் விற்று முடிப்பதற்கான மலிவு விலையில் ஸ்ரீசாந் புத்தகசாலை, நல்லூர். [சி-8678]

### காவேரி சீயாக்காய்

தரத்தின் சிகரம் காவேரி. 80% சீயாக்காயும் 20% ஐந்து வகை இயற்கைப் பொருள்களும் சேர்ந்து தயாரிக்கப்பட்டு இப்போது எல்லாக் கடைகளிலும் விற்பனையாகிக்கொண்டிருக்கிறது காவேரி சீயாக்காய்ப்பவுடர். ஏக விநியோகஸ்தர் நியூ வசந்தாஸ் ஸ்ரோர்ஸ், 350, பருத்தித்துறை வீதி, குருநகர். (32228)

### ஆண்டு - 4

14-8-94 ஞாயிறு வெளியிடப்பட்ட ஆண்டு - 4 மாதிரி வினாத்தாள்களை (தமிழ், கணிதம், ஆங்கிலம்) பெறாதவர்கள் பெற்றுக் கொள்ளலாம். ஆண்டு - 4 Week end Class வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன. புதிய கல்வி நிலையம், இல. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (32381)

### தவறவிட்டது

சே. ரகுபதி ஆகிய நான் திருநெல்வேலி அம்மன் கோவிலில் இருந்து சிவன் கோயிலுக்குச் செல்லும் வழியில் ஒரு சிறிய கைப்பையை தவறவிட்டுவிட்டேன். தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் சே. ரகுபதி, நிவ்விசிரார், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (32382)

### மணமகள் தேவை

நற்பண்புள்ள இரசபாலம் குறைந்த 35 வயது பட்டதாரி ஆசிரியருக்கு 30 வயதிற்குட்பட்ட இந்தப் பண்புள்ள ஆசிரியை மணப்பெண் தேவை. முழு விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். இல. 679, மே/பா, உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். [32360]

### மாணவர்களுக்கு

கல்வி உளவியல் கருத்துக்கள் கலை இலக்கிய கோட்பாடுகள் - உளவியலும் நவீன கற்பித்தலும் ஆக்கம்: கலாநிதி சபா. ஜெயராஜா விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி-8850)

## சொத்தி உபாலி தொடர்ந்தும் விளக்கமறியலில்

கொழும்பு, ஓக. 15

"பாதான உசை" இதழின் வல் குழுத் தலைவர் சொத்தி உபாலியையும் மற்றும் பத்துப் பேரையும் இம்மாதம் 22ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீர்கொழும்பு நீதிவான் எல். யு. ஜயசூரியா உத்தரவிட்டார்.

பலத்த பாதுகாப்புடன் சந்தேக நபர்கள் நீதிமன்றத்துக்குக் கொண்டுவரப்பட்டனர். (ஒ-எ)

அறிந்ததைச் சொல்லுங்கள்!
பதக்கத்தை வெல்லுங்கள்!!

## தமிழீழத் தாயகத்தை தெரிந்து வையுங்கள்

உங்கள் அறிவு மேம்படுத்தலுக்கு

தமிழீழத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்

வினா விடைப் போட்டி

ஒரு பவுண் தங்கப் பதக்கம் பரிசு

## அன்பு மாணவர்களே!

உங்கள் அறிவினை வளமாக்கி
உங்கள் திறமையை வெளிக்காட்டுங்கள்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன உட்கட்டுமானப் பகுதியினரால் நல்லூர் கண்காட்சியை முன்னிட்டு நடத்தப்படவிருக்கும் வினாவிடைப் போட்டியில் கலந்து கொண்டு முழுநிறைவான தங்கப்பதக்கத்தையும் பெறுமதி மிக்க பரிசில்களையும் சான்றிதழ்களையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

விண்ணப்ப முடிவு திகதி: 15 - 08 - 1994

விவரங்கள் கடந்த 07, 08, 09ஆம் திகதி பத்திரிகைகளில்

உட்கட்டுமானப் பகுதி,
தமிழீழ
பொருண்மிய மேம்பாட்டு
நிறுவனம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.

[சி-8874]

## இராணுவச் சட்டத்தை பிரகடனம் செய்து
# ஆட்சியைத் தர மறுத்தால் முறியடிக்க திட்டம் உண்டு
## செய்தியாளர் மாநாட்டில் சந்திரிகா

கொழும்பு, ஓக. 15

இராணுவச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி ஆட்சியை ஒப்படைக்க ஜனாதிபதி மறுக்கும் பட்சத்தில் அதனை முறியடிக்கும் மாற்றுத் திட்டம் ஒன்றை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தயாரித்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இத்தகவலை முன்னணியின் பிரதித் தலைவி சந்திரிகா குமாரணதுங்க கடந்த வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தற்போதைய நிலைவரத்தில் அம்மாற்றுத் திட்டம் பற்றிய விவரங்களை பகிரங்கப்படுத்த விரும்பவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

பொதுத்தேர்தலில் ஐக்கிய முன்னணி வெற்றியீட்டும் பட்சத்தில் அக்கட்சியிடம் ஆட்சியை ஒப்படைக்காதிருக்க ஜனாதிபதி விஜேதுங்க ரகசியத் திட்டம் வகுத்திருப்பதாக சந்திரிகா ஏற்கனவே குற்றஞ்சாட்டியிருந்தார். (ஒ-எ-6)

## தேர்தல் பாதுகாப்புக்கு 46 ஆயிரம் பொலீஸார்

கொழும்பு, ஓக. 15

வாக்களிப்பின் போதும் அதன் பின்னரும் சட்டம் ஒழுங்கைப் பேணும் நடவடிக்கையில் 46 ஆயிரம் பொலிஸார் ஈடுபடுத்தப்படவுள்ளனர். இது தவிர மேலும் பல நடமாடும் பொலிஸ் பிரிவுகள் மக்கள் கூடும் இடங்களில் செயற்படவுள்ளன.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் இக்னேசியஸ் கனகரத்தினம் இத்தகவலை நேற்று ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

இதேவேளை—

தேர்தலின் பின்னர் ஏற்படக்கூடிய எத்தகைய நிலைமையையும் சமாளிக்கத் தயாரான நிலையில் இருப்பதாக பொலிஸ் — இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

வன்செயல்களில் ஈடுபடாது அமைதியைப் பேணுமாறு தமது வேட்பாளர்களுக்கு பணிப்புரை வழங்குமாறு ஜனாதிபதி விஜேதுங்க அனைத்துக் கட்சிகளின் தலைவர்களையும் கேட்டுள்ளார்.

நாட்டில் சட்டத்தையும், அமைதியையும் பேணுவதற்கு சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் அதிகாரிகள் ஆகியோரையும் ஜனாதிபதி பணித்துள்ளார். (ஐ-6)

## சிப்பாய் தற்கொலை

கொழும்பு, ஓக. 15

மட்டக்களப்பு மாவட்டத்தில் சித்தாண்டியில் இராணுவச் சிப்பாய் ஒருவர் தன்னிடமிருந்த துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டார்.

குருநாகலைச் சேர்ந்த காரியவாசம் என்ற சிப்பாய் ஆவார். (ஒ-3)

# முதலாம் வருட நினைவஞ்சலி

மண்ணில் அரும்பாய்
05 - 05 - 1976

விண்ணில் மலராய்
27 - 07 - 1993

திதி:
15 - 08 - 1994



## செல்வன் பரமலிங்கம் மணிவண்ணன்
(பாபு)

[பரியோவான் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன், 95ஆம் ஆண்டு வர்த்தகப் பிரிவு]

வருடம் ஒன்று சென்றதைப் உன் வண்ண முகம் நாம் பார்த்து
வாராயோ பாபுக் கண்ணா எம் மனதை ஆற்றிவிட
பாபு பாபு என்றே நாமழைத்து ஏங்குகின்றோம்
கேட்டிலையோ செல்லக் கண்ணா மௌனித்து இருப்பதேனோ

நித்தம் மலரும் ஆயிரமாயிரம் மலர்களில்
புத்தம்புது மலராம் உன் முகம் காண்கின்றோம்
பித்தாகித் தவிக்கும் எம்மிதயம் மலர நீயும்
வித்தாகி வாராயோ நீ மீண்டும் செல்லக்கண்ணா!

எம் கண்ணில் இன்று நீரில்லை ஆனால் எம்மிதயத்தில் இன்னும் செந்நீர் வடிகின்றது ஆண்டொன்று சென்றாலும் மைந்தா உன் சங்கீதம் எம் காதில் கேட்டிடும். ஆண்டவன் சந்நிதியில் உன் பண் பரவி அமைதி பெற்றிட வேண்டுகின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உன் அன்பிற்கினிய,
அப்பா, அம்மா,
அக்கா, தங்கை,
அம்மம்மா,
சித்தப்பாமார், அப்ரமார்,
தம்பிமார், தங்கைமார்.

36/16, காங்கேசந்துறை ஒழுங்கை,
யாழ்ப்பாணம். [32350]

# ஓராண்டு நினைவஞ்சலி





**கந்தையார் சண்முகநாதன்**
மண்ணில்: 15 - 04 1928
விண்ணில்: 27 - 07 - 1993

**பாலச்சந்திரன் அஜித்**
மண்ணில்: 11 - 04 - 1986
விண்ணில்: 27 - 07 - 1993

திதி: 15 - 08 - 1994

அன்பின் திருவுருவே! பண்பின் உறைவிடமே! பாசத்தின் இருப்பிடமே! குடும்பத்தின் குலவிளக்கே! எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு, மீளாத் துயில் கொண்ட எங்கள் அன்புத் தந்தையே! அன்பு மருமகனே! நீங்கள் எம்மைப் பிரிந்து இன்றுடன் ஓராண்டு பூர்த்தியாகி விட்டாலும், உங்கள் அன்பு முகங்கள் ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் மறையவே மறையாது. தங்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நித்தமும் உங்கள் நினைவால் துயருறும்:
மகன் - மாமா,
ச. சத்தியநாதன்.

G. P. S. றோட்,
கல்வியங்காடு. [32354]

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 09 — 10 — 1924



மறைவு: 10 — 08 — 1989

## அமரர் சுப்பிரமணியம் குருநாதன்
(சட்டத்தரணி)
(முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்)

திதி: 15 — 08 — 1994

"ஆண்டுகள் ஐந்து சென்றாலும், உங்கள் நினைவலைகள் என்றும் எம்மை விட்டு நீங்கா"

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

மனைவி, மக்கள்,
மருமகள்.

13/3, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
கண்டிக்குளி. (32378)

# ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில்: 07 — 06 — 1912



விண்ணில்: 27 — 07 — 1993

திருமதி
## சிவக்கொழுந்து சிவபாதசுந்தரம்

திதி: 15 — 08 — 1994

செல்வங்கள் பல சேர்த்து
செம்மையாய் வாழ வைத்த - எங்கள்
தெய்வமே அம்மா
தேடுகின்றோம் நிதமுமே - உங்களை
ஆண்டொன்று ஆனதம்மா
அர்ச்சிக்கின்றோம் ஆன்மா அமைதிபெறட்டும்.

தங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

"சிவனருள்",
பன்னைப்பதி,
[illegible]
[illegible] (32359)

# விற்பனைக்கு

துப்பு மெத்தைகள், வாகனங்களின் இருக்கைகளுக்கான குசனுகள் "மெத்தைத்துப்பு" ஆகியன மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு வணிகர்களுக்கு விசேட கழிவுண்டு மொத்தமாக தும்பையோ அன்றி மெத்தைகளையோ கொள்வனவு செய்வோர்க்கு கொள்வனவிற்கேற்ப விசேட சலுகைகளும் வழங்கப்படும்.

கேடில்ஸ் தும்புக் கைத்தொழில் நிறுவனம்
தலைமைக் காரியாலயம்,
கச்சாய் வீதி,
சாவகச்சேரி
(7596)

## யாழ். பல்கலைக்கழகம் அரும் பொருளகத்திற்கு வரைபடங்கள் வழங்கல்

மேற்குறித்த அரும் பொருளகத்தில் காட்சிக்கு வைப்பதற்காக, பின்வரும் விவரங்களடங்கிய வரைபடங்களை செய்து வழங்க, தகுதிவாய்ந்த நிறுவனங்கள் / தனிநபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன;

1. இந்திய வரைபடம் — 5 அளவு—5'X5'
2. இலங்கை வரைபடம் — 4 அளவு—5'X4'

அமைப்பு — துணியில் வர்ணம் தீட்டப்பெற்று இடங்கள் குறிக்கப்படல் வேண்டும் படங்கள் சிறப்பான சட்டப்படலில் (Frame) பொருத்தப்படுதல் வேண்டும்.

★ மேலதிக விவரங்களுக்கு தலைவர், வரலாற்றுத் துறையுடன் தொடர்பு கொள்ளவும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 29 - 08 - 1994க்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவாளர், யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

- பதிவாளர்.

[சி-8880]

## 16ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

### திருமதி சண்முகசுந்தரம் சிவகுருநாதன்

01-08-1994 இல் இறைபதம் எய்திய எமது குடும்பத் தெய்வம் திருமதி ச. சிவகுருநாதன் அவர்களின் மரணச் சடங்கில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியும், பல வழிகளிலும் எமக்கு உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் நாளை செவ்வாய்க்கிழமை (16-08-1994 இல்) அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்வதோடு மதிய போசனத்திலும் பங்குபற்றும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

— குடும்பத்தினர்

கோப்பாய் வடக்கு,
கோப்பாய். (32373)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலீஸாரைக் குத்தி விட்டு ரி 56 ரைபிள் அபகரிப்பு

## பொலன்னறுவையில் சம்பவம்

கொழும்பு, ஓக. 15 கடந்த புதன்கிழமை பொலன்னறுவையில் இ-90ரக மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், இரண்டு பொலிஸாரை கத்தியால் குத்தி விட்டு அவர்களிடம் இருந்த இரு ரி-56 ரக துப்பாக்கிகளை அபகரித்துச் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அன்றைய தினம் ஜனாதிபதி விஜேதுங்க பொலன்னறுவையில் ஐ.தே.க. பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசிய பின்னர் கூட்டம் நடந்த இடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டது. (க-ஏ)

## காயமடைந்தவர் விபத்தில்

யாழ்ப்பாணம், ஓக. 15 ஷெல்தாக்குதலில் காயம் அடைந்தவர் மோட்டார் சைக்கிள் ஒன்றில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வரப்படும் வழியில் அவர் எடுத்து வரப்பட்ட மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகியது.

இதனால் அவர் மீண்டும் காயம் அடைந்தார்;

நல்லூர் பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் புத்தூரைச்சேர்ந்த நடராத்தினம் தவனேசன் (வயது 19) என்பவரே காயமடைந்தவராவார். (இ-15)

## நல்லூரில் சுகாதார கண்காட்சி

யாழ்ப்பாணம், ஓக. 15 நல்லூர் திருவிழாவை முன்னிட்டு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பகுதியினால் நடத்தப்படும் சுகாதாரக் கண்காட்சி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் இந்து வீடுதியில் திறந்து வைக்கப்படும். (க-4)

# மரண அறிவித்தல்கள்

## செல்வி திலீபா திலரூபா (சுபா)

(யூனியன் கல்லூரி பழைய மாணவி - கொக்குவில், எடிசன் அக்கடமி மாணவி)

கோவில்கட்டியைப் பிறப்பிடமாகவும், மல்லாகம் நீதிமன்ற வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட, காலஞ்சென்ற நடராஜா கனகபாலன் (குஞ்சாம்பி) மற்றும் திருமதி வரதாட்சிணி ஆகியோரின் அன்பு மகள் செல்வி திலீபா திலரூபா 13-8-94இல் இறைவன் எய்தினார். இவர் வித்தியா சங்கரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 13-8-94 சனிக்கிழமை மல்லாகத்தில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
ந: கனகசேகரன்;
[பெரியதந்தை]

சிவன்கோவிலடி,
கன்னாகம். [32385]

## T. A. சண்முகநாதன்

காரைநகர் களபூமி பொன்னாவளையைப் பிறப்பிடமாகவும், மலேசியா, கோலாலம்பூரை நீண்ட கால வசிப்பிடமாகவும் கொண்ட தயமோதரம் பிள்ளை ஆறுமுகம் சண்முகநாதன் 12 - 08 - 94இல் மலேசியாவில் காலமானார். இவர் சரஸ்வதியின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான சபாரத்தினம், கனகரத்தினம், மகாதேவா, குமாரசாமி மற்றும் பூரணம் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 13-8-94இல் மலேஷியாவில் நடைபெற்ற பூதவுடல் அங்கு தகனம் செய்யப்பட்டது என்பதை உற்றார், உறவினருக்கு அறியத் தருகிறேன்.

தகவல்:
திருமதி பூரணம் இராமலிங்கம்.
(சகோதரி)

இல. 76/60 இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம். (32387)

## ஆறுமுகம் லோகேஸ்வரன்

(தோப்பு, அச்சுவேலி)
(முன்னாள் ஆசிரியர், அச்சுவேலி மகாவித்தியாலயம்)

ஆறுமுகம் லோகேஸ்வரன் நேற்று அகால மரணம் அடைந்துள்ளார்.

அன்னார் திருமதி இராஜேஸ்வரியின் (இளைப்பாறிய ஆசிரியை, அச்சுவேலி புனித திரேசா மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும், கிரேதாகரன் (ஆசிரிய மாணவன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை). திருமதி கிரிஜாம்பாள் (ஆசிரியை, அச்சுவேலி சரஸ்வதி வித்.) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. கி. தர்மரத்தினத்தின் (ஆசிரியர், அத்தியார் இந்துக் கல்லூரி-நீர்வேலி) அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அருகிலுள்ள உறவினர் இல்லத்தில் இன்று திங்கட்கிழமை மு. ப. 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
லோ. கிரேதாகரன், (மகன்)
(கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

பருத்தித்துறை வீதி,
நாவலடி,
கோப்பாய் [32395]

## தம்பிஐயா ரவிச்சந்திரன் (ராஜன்)

இணுவில் மேற்கை பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஐயா ரவிச்சந்திரன் 10 - 8 - 94 அன்று பிரான்சில் அகால மரணமானார்.

இவர் தம்பிஐயா இரத்தினம் தம்பதிகளின் கடைசிப்புதல்வனும், தவமணி, இந்திராணி (பிரான்ஸ்), சந்திரா தேவி (கனடா), கணேஸ்வரி (ஆசிரியை இராமநாதன் கல்லூரி), வைகுந்தவாசன், ஆறுமுகதாஸ், சந்திரபோஸ் (பிரான்ஸ்), சரோஜினிதேவி (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரரும், ஜெயராஜா, நடராட்ணராஜா (பிரான்ஸ்), ஜெகதீஸ்வரன் (கனடா), விஜயலக்சுமி (பிரான்ஸ்), சந்திரகாந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும், தவ்பந்தி (கனடா), தமயந்தி (உடுவில் மகளிர் கல்லூரி), மோகினி, கஸ்தூரி, அனுதாஸ், நிருபன், நிருசா (பிரான்ஸ்), காயத்திரி கோதனா, கயன் (கனடா), சரன், துளசி (ஜேர்மனி) ஆகியோரின் மாமனும், வேர்துஜாவின் (பிரான்ஸ்) சித்தப்பாவும் ஆவார்.

ஈமக்கிரியைகள் 17 - 8 - 94 அன்று பிரான்சில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் யாவருக்கும் அறியத் தருகிறேன்.

தகவல்;
ஜெயராஜா
(மைத்துனர்)

பாக்சங்க ஒழுங்கை,
இணுவில் மேற்கு,
இணுவில். (32388)

## ஆலயங்களில்

வலி கண்மணி மாதா தேவாலய நவநாள் உற்சவ கால தேவ நற்கருணை ஆராதனையும் திருப்பலி பூசையும் நேற்று மாலை ஆரம்பமானது. இன்று திங்கள் காலை திருநாட் பாடற்பலி பூசையும் திருச்சொரூபபவனி இடம் பெறும். [ஐ-117]

* * *

நவாலி முருகமூர்த்தி கோவில் வருடாந்த மகோற்சவம் இப்போது நடைபெற்று வருகிறது. பிரசங்கபூஷணம் நடேசன் சிவசண்முகமூர்த்தி தினமும் இரவு 8 மணிக்கு 'முருகன் பெருமை' என்னும் பொருளில் இசைப்பேருரை நிகழ்த்தி வருகிறார். (க-30)

* * *

மீசாலைவடக்கு இராமாவில் முருகன் ஆலய வருடாந்த உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

விநாயகப் பெருமானதும் முருகப் பெருமானதும் சப்பரத் தேர்களின் வெள்ளோட்டம் 23 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். தேர்த் திருவிழா 24 ஆம் திகதியும் தீர்த்தத் திருவிழா 25 ஆம் திகதியும் இடம் பெறும். (க)

## இன்று

சுழிபுரம் ஸ்ரீராம் நல்லொழுக்க வாலிபர் சங்க பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டி இன்று திங்கள் பிற்பகல் 1 மணியளவில் சங்க மைதானத்தில் நடைபெறும். (ஏ)

* * *

சித்தன்கேணி மாதர் அபிவிருத்தி நிலையத்தினரால் நடத்தப்படும் தையல், கைப்பணி மனையியற் பொருட்காட்சி சித்தன்கேணி மாதர் அபிவிருத்தி நிலைய மண்டபத்தில் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு வலிமேற்கு பிரதேசசெயலர் திரு. கா. சந்திரராசா தலைமையில் நடைபெறும் (க-175)

* * *

தென்மராட்சிக் கல்விக் கோட்டத்திற்குப்பட்ட பாடசாலை தொகை மதிப்பீடு தொடர்பாக, பாடசாலைகளின் அதிபர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம், சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. [க-31]

* * *

யாழ்ப்பாணம், ஓக. 15 யாழ். வேம்படி மகளிர் கல்லூரிக்கு நூல்களை கையளிக்கும் வைபவம் இன்று பி. ப. 2 மணிக்கு கல்லூரி மெமிலின் தம்பையா மண்டபத்தில் நடைபெறும்.

கல்லூரி அதிபர் திருமதி பி. எஸ். ஷந்தராஜா தலைமையில் நடக்கும் இந்நிகழ்ச்சியில் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் நூல்களை அன்பளிப்புச் செய்யும். யாழ் மாநகர சபை பொறியியலாளர் திரு மா. இராமதாசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (அ)

மனிதாபிமான......
[5 ஆம் பக்கத் தொடர்ச்சி]
றனர்.

2. இஆவது எம். பி. பி. எஸ் மருத்துவ பரீட்சையானது யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட பேராசிரியர்களாலும், களனிப் பல்கலைக்கழக மருத்துவ பீட பேராசிரியர்களாலும் அரசினால் நடத்தப்பட்டது.

3 பரீட்சையில் சித்தி எய்திய 49 மாணவர்களுக்கு மட்டுமே யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் கல்வியைத் தொடர அரசு சிபார்சு செய்துள்ளது. இம் மாணவர்களுக்கு எம். பி. பி. எஸ். [எல். எல். எம். சி] என்ற பட்டத்தையே அரசு வழங்குவதற்கு சிபார்சு செய்துள்ளது.

இந் நிலையில் மருத்துவ பீடமாணவர்களின் எதிர்பார்ப்பானது தமிழ் மாணவர்களாகிய எம்மை வேதனைக்குள்ளாக்கியுள்ளது. ஏனெனில் வட கொழும்பு மருத்துவக் கல்லூரியில் பயிலும் 800 மாணவர்களையும் அரசு உள்வாங்கியாக்கும்போது இந் நாற்பத்து மூன்று [43] மாணவர்களும் கல்வியைத் தொடர யாழ் மருத்துவபீட மாணவர்கள் எதிர்ப்புத் தெரிவிப்பது வேதனைக்குரியதே.

ஆகையினால் மருத்துவ பீட மாணவர்கள் பல்கலைக்கழக மருத்துவ பீட சபை உறுப்பினர்கள், பல்கலைக்கழக மூதவை உறுப்பினர்கள், பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்கள் யாவரும் மனிதாபிமான அடிப்படையில் எமது கல்வியைத் தொடர ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம் என்று அறிக்கை கூறுகின்றது. (அ)

## வயல்விழா

ஆராய்ச்சி நிலைய செயற்பாடுகளை வெளிக்கொணரும் முகமாக கடந்த 19 ஆம் திகதி திருநெல்வேலியில் வயல்விழா ஒன்று நடாத்தப்பட்டது.

ஆராய்ச்சி நிலையப் பொறுப்பதிகாரி திரு பொன்னுத்துரை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அரச அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகளும் பெருமளவான விவசாயிகளும் கலந்து கொண்டனர்.

இவ்விழாவின் போது தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் ஆய்வு செய்யப்படும் வத்தகை, சூரியகாந்தி, ஆமணக்கு ஆகியவற்றின் இருபதிற்கு மேற்பட்ட பயிர்மாதிரி துண்டங்கள் விவசாயிகளுக்குக் காட்டப்பட்டு விளக்கங்களும் அளிக்கப்பட்டன. (எ)

## நாளை

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டத்தினால் நடத்தப்பெற்ற ஆண்டு 2 ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டோருக்கான கொடுப்பனவு நாளை செவ்வாய்க்கிழமை காலை 9-00 மணிக்கு மருதனார்மடத்தில் இயங்கும் யூனியன் கல்லூரியில் வழங்கப்படுமென்று கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எ)

## புக்காரா வட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 15 புக்காரா விமானம் ஒன்றும் ஹெலி ஒன்றும் சனிக்கிழமை காலை 6 30 மணிக்கும் 7 30 மணிக்கும் இடையில் யாழ். நகர கரையோரப் பகுதிகள் மீதும் — பொன்னாலை, மூளாய், சுழிபுரம் உட்பட வலிகாமத்தின் ஏனைய பகுதிகள் மீதும் — பல தடவைகள் சுற்றி வட்டமிட்டு நோட்டமிட்டன. (ஐ-15-30-51)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஓக. 15 யாழ்ப்பாணம் மருத்துவ சங்கத்தால் மாதந்தோறும் நடத்தப்படும் முழுநாள் மருத்துவக் கருத்தரங்கு எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமை மாலை 6 மணிக்கு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உள்ள தாதியர் பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

டாக்டர் எஸ். பி. ஆர். சிற்றம்பலம் தலைமையில் நடைபெறும். இக் கருத்தரங்கில் கர்ப்பிணித்தாயினதும் குழந்தையினதும் நலத்தை எப்படிப் பேணுதல் என்பது பற்றி டாக்டர்கள் என் சிவராஜா, எம் குணரட்ணம், தே பாலசிங்கம், திருமதி வி எம். கருணாகரன் ஆகியோர் கருத்துரை வழங்குவார்கள். (க)

## 'ருகுணு' கப்பல் மாவுடன் இன்று வரும்?

பருத்தித்துறையில் பொருள்கள் இறக்கி முடித்து திருகோணமலை சென்ற 'ருகுணு' கப்பல் 930 மெற்றிக் தொன் மாவுடன் இன்று திங்கட்கிழமை பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ-8)

## சென்னையில் பாதுகாப்பு

இந்தியாவின் சுதந்திர தினம் இன்று ஆகும் அதனை ஒட்டி சென்னையில் உள்ள இரு விமான நிலையங்களிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருப்பதாக விமான நிலைய பாதுகாப்புத்துறை துணை ஆணையாளர் எம். பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார் [ஐ]

நியமனம்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
அதிகாரங்களைப் பன்முகப்படுத்துவதன் மூலம் வடக்கு கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும்

இத்தீர்வுக்கு மக்களின் அங்கீகாரம் நிச்சயம் கிடைக்கும்.

விடுதலைப் புலிகளின் தலைவருடன் எங்கே எப்போது பேச்சு நடத்துவது என்பதை பின்னரே முடிவு செய்வோம். என்றார். (உ-ஏ-3-6)

மகாசங்கத்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
னுக்கும் அந்தக்கடமை உண்டு என்பதை மகாநாயக்கர் உணர வேண்டும்.

பௌத்த சாசனத்தைப் பாதுகாப்பதற்காக தவறிழைக்கும் பௌத்த மதகுருமார்களை மகாசங்கத்தில் இருந்தே பண்டைக்கால மன்னர்கள் வெளியேற்றினர் என்பதை அஸ்கிரிய மகாநாயக்கர் தெரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு டாக்டர் குணதாஸ அமரசேகரா தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (உ-ஏ)

★ யாழ். மாவட்டத்தில்

# தேர்தல் வேலைக்கு 260 பேர் விமானம் மூலம் பலாலிக்கு!

யாழ்ப்பாணம், ஓக. 15 யாழ். மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் நடக்கவிருக்கும் தேர்தல் பணிகளுக்கு என 260 அரச ஊழியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று —

அவர்களை கடந்த சனியன்று கொழும்பிலிருந்து பலாலிக்கு இரண்டு விமானங்களில் கூட்டி வர விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் தெரிவு செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானோர் வடபகுதி நிலைமையைக் காரணம் காட்டி இங்கு வர மறுப்பு தெரிவித்துள்ளனர் என்றும் —

ஆனால் மறுப்பு தெரிவிக்கும் அவர்களின் பதிலை ஏற்க தேர்தல் திணைக்கள உயரதிகாரிகள் மறுத்து விட்டனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# கிழக்கிலும் தேர்தல் வன்முறை

கொழும்பு, ஓக. 15 கிழக்கு மாகாணத்தில் தேர்தல் வன்முறைகள் அதிகரித்து வருவதாக செய்திகள் தெரிவித்தன.

கடந்த சில தினங்களில் இடம்பெற்ற பல சம்பவங்களில் பலர் காயமடைந்துள்ளனர்; உடைமைகளும் சேதமடைந்துள்ளன. அத்தகைய சில சம்பவங்களின் விவரம் வருமாறு:-

★ வாழைச்சேனைக்கு அருகேயுள்ள மீராவோடை முஸ்லிம் கிராமத்தில் இரு கட்சிகளின் ஆதரவாளர்களிடையே இடம்பெற்ற மோதலில் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர் ஒருவர் கத்திக் குத்துக்கு இலக்கானார்.

★ வாழைச்சேனை முஸ்லிம் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் பட்டப்பகலில் வீதியில் வைத்து தாக்கப்பட்டார்.

★ வாழைச்சேனை முஸ்லிம் பகுதியில் ஐ. தே. க— முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் பல கைகலப்பு சம்பவங்களில் ஈடுபட்டுள்ளனர்.

★ கல்முனைக்குடி பகுதியில் கடந்த புதன் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது. முஸ்லிம் காங்கிரஸ் முன்னாள் எம். பி ஒருவரின் மகன் இதனால் காயமுற்றார்;

★ நிந்தாவூரில் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

★ மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் ஒருவரின் வீடு உட்பட ஐந்து வீடுகள் தாக்கப்பட்டுள்ளன. வேட்பாளரின் மனைவி கத்தியால் குத்தப்பட்டார். (உ-3)

# சமய நூல்கள், புடைவைகளை எடுத்துவர அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், ஓக. 15 நல்லூர் உற்சவ காலத்தில் பக்தர்களுக்கு விநியோகிப்பதற்கென, சமய நூல்களைக் கொண்டு வருவதற்கு பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு அனுமதி வழங்க மறுத்துவிட்டது.

நல்லூர் உற்சவ காலத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்து சங்கங்கள் சிலவற்றினூடாக இலவசமாக விநியோகிக்கவென கொழும்பில் உள்ள இராமகிருஷ்ண மிஷன் ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான நூல்களை அன்பளிப்புச் செய்திருந்தது.

ஆனால் அந்தப் புத்தகங்களை யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வருவதற்கு பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு அனுமதி வழங்க மறுத்துவிட்டது.

இதேபோல யாழ். மாவட்டத்தில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கென தமிழகத்தில் உள்ள இந்து மன்றங்கள் இராமகிருஷ்ண மிஷன் அனுப்பிய ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான உடுபுடவைகளை இங்கு எடுத்து வருவதற்கும் பாதுகாப்பு இணைப்புக் குழு அனுமதி வழங்க மறுத்துவிட்டது. (அ-8)

தமிழர்..
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ணிக்கு மட்டக்களப்பில் 3 இடங்களும், திருகோணமலையில் ஓர் இடமும், வவுனியாவில் இரண்டு இடங்களும், அம்பாறையில் ஓர் இடமுமாக மொத்தம் ஏழு இடங்கள் கிடைக்கும் என்றும்—

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் மட்டக்களப்பில் போட்டியிடும் முன்னாள் எம். பியான ஜோசப் பரராஜசிங்கம் நம்பிக்கை தெரிவித்தார்.

தொங்கு நாடாளுமன்றம் ஏற்படும்போது—

சமஷ்டி அமைப்பு உருவாகும் வகையில் அரசமைப்பைத் திருத்தி, ஒருங்கிணைந்த வடக்கு - கிழக்கிற்கு சுயாட்சி வழங்குவதை எழுத்தின் மூலம் உறுதிப்படுத்தும் கட்சிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிக்கள் ஆதரவு வழங்குவர் என்றும் அவர் சொன்னார் (உ-3)

ஆளும் கட்சியின...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஒன்றில் அவர் கருத்து வெளியிட்டார். அங்கு அவர்மேலும் கூறியதாவது:-

நாளை நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் மூன்றில் இரு பங்கு பெரும்பான்மையுடன் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வெற்றியீட்டுவது நிச்சயம்.

பதவி ஏற்கும் எமது அரசாங்கம் மூன்று பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுத்துச் செயற்படும்.

முதலாவது —

கொலையுண்டு வரும் ஜனநாயகத்தை மீண்டும் நிலைநாட்டுவது.

இரண்டாவது —

ஆளும் கட்சி காலி செய்த கஜானாவை மீண்டும் நிரம்பி வழியச் செய்வது.

மூன்றாவது —

ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்குவது.

முன்னணி அரசு அமைக்கப்பட்டவுடன், பதவி ஏற்கும் அமைச்சர்கள் மற்றும் எம். பிக்களின் சொத்து, உடைமைகளின் விவரம் பொதுசனத் தொடர்பு சாதனங்கள் மூலம் மக்களுக்கு தெரிவிக்கப்படும்.

பொதுமக்களின் பணத்தை அரசியல்வாதிகள் சூறையாடுவதைச் சட்டரீதியாகத் தடுக்கும் முதற்பெண் நானாகவே இருப்பேன்.

எமது கூட்டணி ஆட்சிக்கு வந்தால் அதிகார துஷ்பிரயோகம், மனித உரிமை மீறல்கள் ஆகியவை குறித்தும் விசாரணை நடத்தப்படும். ஆட்சி அத்துமீறிய வகையிலான நடவடிக்கைகளோ பழிவாங்கும் செயல்களோ இடம் பெறமாட்டாது என நான் உறுதி கூறுகின்றேன்.

நாம் அமைக்கும் அரசு இந்தியாவுடனான உறவுகளை வளர்க்கவும் முயற்சி எடுக்கும் என்றார். (உ-எ-3-6)

## 1988, 89, 90களில்

# நாட்டின் தென் பகுதியில் 19 ஆயிரம் பேர் இறந்தனர்

## பிரதமர் ரணில் தகவல்

கொழும்பு, ஓக. 15 1988, 89, 90 ஆம் ஆண்டுகளில் தென் பகுதியில் இடம்பெற்ற வன்செயல்களில் சுமார் 19 ஆயிரம் பேர் உயிரிழந்தனர் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வெரித்தாஸ் வானொலியின் சிங்களச் சேவைக்கு அளித்த பேட்டியில் அவர் இத்தகவலை வெளியிட்டார்.

இக் காலப்பகுதியில் காணாமல் போனவர்களின் உறவினர்களுக்கு, காணாமல் போனவர்களின் மரணச் சான்றிதழ்களை வழங்குவதற்கும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

"எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றியீட்டும் எமது பாரம்பரிய வாக்குகள் சிதறவில்லை" — என்றும் அவர் சொன்னார். (எ-ஐ-6)

## கெயர் ஸ்தாபன ஆதரவில்

# யாழ். மாவட்டத்தில் 5 குளங்கள் புனரமைப்பு

வலிகாமம் தெற்கு, ஓக. 15 கெயர் ஸ்தாபனத்தினர், யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள ஐந்து குளங்களை அவ்வப்பகுதி விவசாயக் குழுக்கள் ஊடாக புனருத்தாரணம் செய்ய தீர்மானித்துள்ளனர்.

செம்மணி வைரவர் கோயிலடியிலுள்ள செம்மணிக்குளம், கிராம சேவையாளர் கந்தோர் வல்லிபுரக்குறிச்சியில் உள்ள கவுடுராய்க்குளம், கட்டுடை வட்டவை சந்தோரடியில் உள்ள கிலைகாமம் குளம், புத்தூர் சமநல சேவை நிலையத்தடியிலுள்ள மீசாலை வயற்குளம், கந்தரோடையில் உள்ள கந்தரோடைக்குளம் ஆகிய ஐந்து குளங்களுமே புனரமைப்பு செய்யப்பட உள்ளன.

இக் குளங்களின் புனரமைப்புக்கு ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபா செலவிடப்படவுள்ளதாகவும், இதில் 90 ஆயிரம் ரூபாவை கெயர் ஸ்தாபனம் பொறுப்பேற்றும் எனவும் —

ஏனைய 50 ஆயிரம் ரூபாவையும் பொதுமக்கள் திரட்டு நிதியில் இருந்து செலவிட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இக் குளங்களுக்கான புனரமைப்பு வேலைகளை கண்காணிப்பதற்கென குளக்குழு, பிரதேசமட்டக்குழு, மாவட்ட மட்டக்குழு என மூன்று குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளனதாகவும் —

இக் குளங்கள் புனரமைப்பு செய்யப்பட்ட பின்னர், மேலும் பல சிறிய குளங்கள் புனரமைப்பு செய்யப்பட்டு விவசாய தேவைகளுக்கு பயன்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-151)

# பம்பாய் வெங்காயம் அமோக விளைச்சல்

யாழ்ப்பாணம், ஓக. 15 யாழ். குடாநாட்டில் பம்பாய் வெங்காயம் வழமையை விட இம்முறை அமோக விளைச்சலை கொடுத்துள்ளது.

குறிப்பாக அராலி, கோப்பாய் பகுதி விவசாயிகளுக்கு நல்ல விளைச்சல் கிடைத்துள்ளது.

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று, அம்பன் பகுதிகளிலும் இம்முறை பம்பாய் வெங்காயம் பயிரிடப்பட்டுள்ளது.

பம்பாய் வெங்காயம் அறுவடை தொடங்கி விட்டதால் அதன்விலையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. (ந-17)

## வீரச்சாவு

கடந்த 10 ஆம் திகதி யாழ். மாவட்டத்தில் இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் போராளியான கப்டன் இருமாறன் அல்லது சிறி (புவேந்திரராஜா ராகுலன் - நீர்வேலி) வீரச்சாவடைந்தார். (உ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 392/8, இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 15 - 08 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org